2013 ஏப்ரல் 2]

அடிப்படையில் அந்த Zero discharge செய்யாமல் விடுகிற காரணத்தினால் அந்தப் பாதிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயும், விவசாயத்தையும், தொழிலையும் பாதுகாக்க வேண்டுமாயும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி பெறாத சாயப் பட்டறைகள், சலவைப் பட்டறைகள் எந்த இடத்திலும் ஓடவில்லை. அந்தந்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக தொடர்ந்து இது குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அப்படி ஏதாவது, எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அனுமதி பெறாத தொழிற்சாலைகள் மூடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

127—

சுற்றுலா மாளிகை

***6451—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் சுற்றுலா மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் சுற்றுலா மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். இந்த நிதியாண்டிலே அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லில் வடித்த தெய்வமும் கருணைபுரிய நாளாகும் என்று பொன்னில் வார்த்த உருவமாய் தமிழ் பூமிக்கு வந்த தாய் உருவ தெய்வமே; வணங்கிய கரங்கள் விலகும் முன்னே வரம் தரும் அன்னையே; கும்பிட்ட கரங்கள் பிரியும் முன்னே கோரிக்கைகளை நிறைவேற்றும் ஒப்பில்லா உயர் தலைவியே; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். இல்லை என்பது இல்லை நாங்கள் வாழும் நாட்டிலே என்கின்ற புரட்சித் தலைவரின் வைர வரிகளை நடைமுறைப்படுத்தி, வைர விழா கண்டு, நாட்டில் இல்லாமையைக் களைந்து புதிய சரித்திரம் படைத்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமான கோவில்பட்டியில் சுற்றுலா மாளிகை இல்லை என்ற குறையை இல்லாமல் செய்து, எங்கள் மாவட்டத்திற்கு வெள்ளி விழாப் பரிசாக வழங்கிய இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

128—

கால்நடை மருந்தகம்

***8831—திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, அனந்தமங்கலம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?